நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்
புதுச்சேரி Puducherry 29.11.2024 வெள்ளிக்கிழமை Friday Volume : 19 Issue:300 PAGE 6 Rs:7 குரோதி ஆண்டு கார்த்திகை 14ஆம் தேதி

ஜிப்மரில் அரசியலமைப்பு தினவிழா

புதுச்சேரி, நவ.29- புதுவை ஜிப்மர் மருத்துவ மனையில் அரசியலமைப்பு தினம் விழா நிர்வாகப்பிரிவு, மருத்துவமனை பிரிவு மற்றும் கல்வி பிரிவு ஆகிய இடங்களில் கொண்டாடப்பட்டது.

இந்திய அரசியலமைப்பை அங்கீகரித்ததை நினைவு கூறவும், அரசியலமைப்பு சாசனத்தை தோற்றுவித்தவர்களை கவுரவிக்கும் வகையிலும் இந்த அரசியலமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. அரசியலமைப்பு தின முகப்புரை, துணை இயக்குநர் (நிர்வாகம்),

மூத்த நிர்வாக அதிகாரி மற்றும் சட்ட அதிகாரி ஆகியோர்களால் ஊழியர்கள் முன்னிலையில் நிர்வாகப் பிரிவில் வாசிக்கப்பட்டது.

நிகழ்ச்சி பொறுப்பு மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் துரைராஜன் தலைமையில் மருத்துவமனை பிரிவிலும், முதல்வர் (கல்வி) தலைமையில் கல்வி மையத்திலும் நடைபெற்றது. ஏராளமான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் இதில் கலந்துகொண்டு தமிழ், இந்தி மற்றும் ஆங்கிலத்தில் முகப்புரையை வாசித்தனர்.

ஜிப்மரின் பல்வேறு இடங்களில் அரசியலமைப்பு தினம்சம்பந்தப்பட்டபதாகைகள் வைக்கப்பட்டிருந்தது.